IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.141/2022

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SUMANGALI KRISHNAN |
| HUSBAND'S NAME | : | PARI |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | PROFESSOR |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 20th day of September 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1-ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3-ம் ஆஜர் இல்லை. பிரிவு 317, கு.வி.மு.ச. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் காட்பாடியில் உள்ள வி.ஐ.டி கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது மாமனார். ஆஜர் 1-ம் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான தட்சணாமூர்த்தி மற்றும் ரமேஷ் ஆகியோரையும் தெரியும். அவர்கள் எனது வீட்டில் அருகில் குடியிருக்கும் நபர்கள் ஆவார். கடந்த 2018-ம் ஆண்டு சேவூரில் உள்ள அம்பாலால் டிஜிஸ்ட் என்ற தொகுப்பு குடியிருப்பிகளில் நானும் எனது அம்மாவும் தனி வீடு வாங்கி வசித்து வந்தோம். 2019-ல் நான் அ.சா.1-ன் திருமணம் செய்து கொண்ட பின்பு நாங்கள் அங்கு வசித்து வந்தோம். எங்கள் பக்கத்து வீட்டில் வசித்து வந்த 2-ம் எதிரி தட்சிணாமூர்த்தி என்பவர் டிராவல்ஸ் நடத்தி நிறைய கார்கள் வைத்து வந்தார். எங்கள் வீடு கார்னர் வீடு என்பதால் 2-ம் எதிரியின் கார்களை எங்கள் வீட்டின் அருகே நிறுத்து விட்டு அதன் ஓட்டுனர்கள் வீட்டின் ஓரத்தில் சிறுநீர் கழிப்பார்கள். இதை தொடர்பாக கேட்ட போது எங்களுக்கும் 2-ம் எதிரிக்கு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. பிறகு 2021-ம் வருடம் மார்ச் மாதம் எதிரிகள் மூவரும் அடிக்கடி பராமரிப்பு பணிக்காக சந்தா செலுத்த சொல்லி எனது கணவரை வற்புறித்தி வந்தார்கள். எனது கணவர் 2-ம் எதிரிக்கு ஜி-பே மூலமாக ரூ.2000/- பராமரிப்பு பணிக்காக அனுப்பினார். ஆனால் 2-ம் எதிரி எனது கணவரிடம் பணம் பெறவில்லை என்று பணம் செலுத்தாதவர்கள் பட்டியலில் அவர் பெயரை சோ்த்து குறுந்தகவல் அனுப்பினார். எனவே, அவருக்கு தொடர்ந்து பணம் செலுத்த விரும்பவில்லை. 11.07.2021-ம் தேதி இரவு 8.30 மணிக்கு மேலாக எனது குழந்தைக்கு உடல் சரியில்லாததால் மருத்துவமணைக்கு சென்று திரும்பி வந்தபோது, எங்கள் குடியிருப்பில் செக்கியுரிட்டி 2-ம் எதிரி எங்களை குடியிருப்பில் நுழையக் கூடாது என சொல்லி வழி மறித்தார். நாங்கள் குழந்தைக்கு மருந்து கொடுக்க வேண்டும் என்பதால் உள்ளே நுழைந்து எங்கள் வீட்டுற்கு சென்றோம். அப்போது எதிரிகள் மூவரும் எங்கள் வீட்டில் பிரதான வாயிலை திறந்து உள்ளே நுழைந்து எனது கணவரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். 1 மற்றும் 2-ம் எதிரிகள் எனது கணவரை சந்தா

தொகையை கட்ட வக்கில்லை வெளியே வாட உன்னை கொன்று விடுவேன் என மிரட்டினார்கள். வெளியே வந்த எனது கணவரை 1–ம் எதிரி துரைசாமி செங்கல்லை கொண்டு நெற்றியில் அடித்தார். எனது கணவருக்கு இரத்தம் வழிந்தது எனது கணவர் சொல்லி நான் அதனை எனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்து கொண்டிருந்த போது 2–ம் எதிரியும் அவரது மகனான 3–ம் எதிரியும் கட்டையால் எனது கணவரை பின் மண்டையிலும் தோள் பட்டை மற்றும் கைகளிலும் தாக்கினார்கள். எனது கணவரை சுவற்றில் முட்டினார்கள் நான் சத்தம் போடவே அக்கம் பக்கத்தினர் வந்ததால் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். காயம் பட்ட எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல எனது வீட்டில் வேலை செய்யும் ஜெயக்கொடியின் மகனுக்கு தகவல் சொல்லி அவர் வந்ததும், இருசக்கர வாகனத்தில் எனது கணவரை பெண்ட்லேண்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். நான் அ.சா.2–க்கு போன் செய்து நடந்த விவரத்தை கூறினேன். எனது கணவரின் மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு வெளிநோயாளியாக சிகிச்சை விடியற்காலை எனது கணவர் வீட்டிற்கு வந்தார். பிறகு காலை 10.00 மணியளவில் அ.சா.1 மற்றும் 2 காவல் நிலையம் சென்று புகார் அளித்தார்கள். போலீஸார் அதனை விசாரணை செய்தார்.

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

2018 செம்டம்பர் மாதத்திலிருந்து நான் மேற்படி வீட்டில் குடியிருந்து வருகிறேன். 2019–ஆகஸ்ட்டு மாதம் எனக்கு திருமணம் நடந்தது. மேற்படி ஒரு வருட காலத்தில் எதிரிகளிடம் எந்த பிரச்சனை இல்லை என்றால் அச்சமயத்தில் 2–ம் எதிரி அங்கு வசித்து வரவில்லை. 2–ம் எதிரியின் குடும்பத்தை எனக்கு நன்கு தெரியும். 3–ம் எதிரியின் பெயர் கணேஷ் என்றால் சரியில்லை. எதிரிகளின் குடியிருப்பு சங்கம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பு வரை பராமரிப்பு தொகை செலுத்தியதில்லை என்றால் சரிதான். ஆனால் அச்சமயத்தில் இரவு காவலர் பணியமர்த்தப் பட்டிருந்தார் என்றால் சரிதான். 1 மற்றும் 2–ம் எதிரிகள் தான் எங்களிடம் சந்தா தொகை கேட்டார்கள் என்றால் சரிதான். செலுத்தப்படும் சந்தா தொகைக்கு ரசீது கொடுப்பார்களா என்றால் நாங்கள் செலுத்திய ரூ.2000/– ரசீது எழுதிக் கொடுக்கவில்லை. நாங்கள் குடியிருப்பு சங்கம் நடத்தும் எந்த கூட்டத்திற்கும் சென்றதில்லை. 2000/– ரூபாய் பணம் செலுத்தியதை போலீஸார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது போல் குடியிருப்பு சங்கம் இருந்திருந்தால் அது பதிவு செய்யப்பட்டு வாடிக்கையாக கூட்டங்கள் நடந்திருக்கும் என்றும் அவ்வாறு ஒரு சங்கம் இல்லை என்றும் கூட்டம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் சரியில்லை. அம்பாலால் தொகுப்பு குடியிருப்பை நிறுவகிக்கும் பிரமோட்டர்ஸ் பராமரிப்பு பணிகளை பார்த்துக்கொள்வதால் எதிரிகளுக்கு சந்தா வாங்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றால் சரியல்ல. பிரச்சனை நடந்த போது அதனை தடுத்தேனா என்றால் ஆமாம். நான் நடந்த சம்பவங்களை வீடியோ எடுத்தேனா என்றால் எடுக்க முயற்சி செய்தேன் ஆனால் எதிரிகள் போட்ட சண்டையால் முடியவில்லை. எனது கணவருக்கு எங்கெங்கு அடிபட்டது என்றால் நெற்றியிலும், தோள்பட்டையிலும் மார்பகத்திலும் காலிலும் அடித்தார்கள். ஆ.சா.2–க்கு போன் செய்த போது இரவு 11.00 மணி இருக்கும். வேறு யாரும் அவருக்கு தகவல் தெரிவித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. புகார் மனுவை வீட்டில் எழுதி காவல் நிலையத்துக்கு எடுத்துச்சென்றார்கள் என்றால் சரிதான். எனது வீட்டின் அருகே கண்காணிப்பு கேமிராக்கள் உள்ளது என்றாலும் அதில் ஒரு கேமரா எனது வீட்டை

நோக்கியவாறு இருந்தது என்றாலும் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனது கணவரின் சட்டையில் இரத்தக்கரை படிந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சொன்னது போல் பணம் செலுத்தியிருந்தால் அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பேன் என்றாலும் சரியல்லை. எனது கணவர் வீட்டிற்கு குடியிருப்பிகளின் வழியில் வேகமாக ஓட்டி வருவதை எதிரிகள் மற்றும் அங்கு குடியிருக்கும் அனைவரும் கேட்டதால் எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான்.